சற்குருப்யோ நம:.

ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள்

அருளிச் செய்த

வைராக்கிய சதகம்.

இது

திருப்பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளாலும்

ஸ்ரீ. க. சிவ. மடாலயம் தருசுவாமிகளாலும்

அச்சியற்றப் பெற்றது.

பால சுப்ரமண்ய ஸ்வாமி பிரஸ்,

சென்னை.

1922.

5

வைராக்கிய சதகம்.

வாழி நெஞ்சமே சென்றிடே னின்றி
தோர் வார்த்தையெற் குரைசெய்வாய், கீழி
யாமியற் றுயர்தவத் திவ்வுடல் கிடைத்ததன்
றேமற்றீ, தூழி காலமிங் கிருக்குமோ நீயு
மோர்ந் துளையெனி னுளபோழ்தே, சூழு
மேழ்பவந் துடைத்தல்செய் யாயிதென்
றொழு தான் றுணைத்தாளே. 1

தாளை யேதா மறிகிலா தெமக்கெளி
தருசிவப் பிரகாசற்,காளி யாமெனத் திரிந்த
வன் பணிபுரிந் தரியவீ டடைகில்லாய்,
கேளை யோமனை யாதிய வளற்றிலே கிடந்
துழைத் தனைநெஞ்சே,நாளை யோலயுந் தூ
தரும் வரினிவர் துணைகொலே நவில்வாயே.

நவிலி னிம்மனை மக்களுக் கொரு
துணை நாமல திலையென்றே, கவலை யுற்ற
ரன் றுண்மறந் தனையுனைக் காலனுர் கொடு
போயிற், குவல யத்தடைந் திவரைநா டொ

றம்புரந் திடுவையோ குறிக்குங்காற், சவலை நெஞ்சமே சிவனலா தயிர்க்குயிர் தானு மோர் துணையாமே. 3

துணைய தாயெமைத் தொடர்தரு தொடர்பரன் றொல்கழ றுணையல்லா, துணைவு செய்தடு மிகலதஞ் ஞாநமென் றுள்ளவா றுணராய்மற்,றிணையி னெஞ்சமே பகையிவரு றவிவ ரெனவினை வழியேவந், தணைவ சிவனை யுனிமுனி வாதிய வடுத்தென்னைக் கெடுத்தாயே. 4

கேடுவ தாம்பொருள் செல்வமே பல்வகைக் கிலேசமற் றதுதன்னை, விடுவ தேசுக மெனவுமோர்ந் திலமுனம் விடுத்துளோர்க் குனைப்போலு, நெடிய யூகம தில்லையோ சொல்லுதி நெஞ்சமே யினிப்பற்றற்,றடைதி மேலா னருளேயே பொருளென வருஞ் செல்வ மதுதானே. 5

தானை சூழமண் ணுலகையாண் டழிபவர் தங்கள்வாழ் வினிதென்றே, நீநினைத் திடியோ நெஞ்சமே யெஞ்சுறு நிமலஞா

நம்துற்றூல், வானும் வையமும் வந்துதாள்
வணங்குமெய் வாழ்வுகாண் டலும்வீண்
முற், போன நாட்கிரங் கவும்வரு மெனந
லோர் புகன்றதோர்ந் திலகாணே. 6

காணி யீதெம திடமிது வெனமனைக்
கருதிமண் ணுகின்றாய், நாணி லாய்மட
நெஞ்சமே யுடலிது நமதிட மலவென்றுற்,
பேண வும்படு மேயிதற் கிடமதாம் பிருதிவி
தனைநாகப், பூணி ஞன்றிருச் சரணமே யுயி
ர்க்கெலாம் புகலிட மதுதேரே. 7

தேர்கி லாயிவண் புகழ்விழைந் தனையி
னித் தேகம்வே றடைந்தாயேற், சாரு மோ
வதி லிதிற்புக ழலதுநீ தானுணர்ந் திடுவா
யோ, பேரி யாதியா மார்கொன்முற் பவத்
திகழ் பெறினுமித் துணைநெஞ்சே, யோரி
னேரில்வீ ருறுதலே புகழிக முறல்பிறப்
பெனவுன்னே. 8

உன்னு கின்றனை யுனைமஞோர் பெரிய
னென் றுணருமா செயவுன்பான், மன்னு

மீசனே பந்தம்வீ டளிப்பவன் மற்றையா றி
ந்தென்று, மன்ன வன்றிருப் பொன்னடி
கரியதா வருந்தவஞ் செய்நெஞ்சே, பின்னை
முன்னவ னுலகறிந் திறைஞ்சுமா பெருமை
செய் குவனேமே. 9

ஒரி னுள்ளமே பாரின்மா னுடர்முத
லுளவறு பிறப்பூடுஞ், சேரு மின்பமொன்
றில்லையென் பதுபிரத் தியக்கமா நீவல்லாய்
போர்க ளாதிதுன் பிமையவ ரடைவதும்
புகலநூ லுணர்ந்தாயே, நேரி லாவரன் கழல
லான் மிகுசுக நிலைபிறி திலையன்றே. 10

அன்றெ னக்குநீ யொருதுணை பிறப்
பிறப் பதிற்றுய ரமுங்கேடுங், தின்ற லொன்
றலால் வியாதியா திகளினுற் செறிதுய ரமு
மோர்ந்தோர்ந், தென்று மேழ்பவக் கஞ்சிலை
நெஞ்சமே யின்பவீ டெது வென்றே, நின்று
நின்றமு திலைதொழு திலைசிவ னேசர்தாள்
பூசித்தே. 11

பூசை செய்துதோத் திரஞ்சொலித்
தனைநினை புண்ணியர் பானண்ணற், காசை

செய்திடு மம்பலக் கூத்தனை யடைகிலை யடைந்தாரிற், பேசு கின்றனை யறவரின் விளங்கினை பிறர்மனை நயக்கின்றாய், சீசி யிங்கிருந் தென்செய்தாய் நெஞ்சமே செத்தி லாய் கெடுவாயே. 12

வாயி னற்பல நூல்படித் துணர்ந்துநல் வழிபிறர்க் குரைசெய்து, நீயு லோகவா சார மோர ணுத்துணை யானுநீங் கிலைநெஞ்சே தூய தாமிவண் பிறர்கொளக் குங்குமஞ் சும ந்துசெல் கரமுன்னிற், காய மானுடத் தின் றதற் கன்றியுட் களவுமின் மையினாலே. 13

நாலு வேதமு மொருசம நிலைசொல நவைசெயீ ரவத்தைப்பாற், கோலு மூவிரு சமயமா கியபடு குழியினா டிழிகின்றாய், வேலை யாவுனக் குடறரு விதியுற வையும தை விடுவிக்குங், கால னார்தொடர் பையுமி னந் தொடருதி போலுநீ கடைநெஞ்சே. 14

நெஞ்ச மேயுட லந்தமா தியைவிடார் நிற்கமற் றையர்க்கெல்லாம், வெஞ்ச மற்கு திப் பரிதிவைக் கொருமிரு கண்டுபுத் திரன்

சான்ரு,லஞ்ச லிவ்வுடற் கிறுதியிப் பொழு
தென வறியொணு மையினுஞந், தஞ்ச
மென்றரன் சரண்விடே லியாமுமச் சமன்
வலி தடுப்பாமே. 15

தடுத்து மேலுமிவ் வுருவமா யினும்
பெறல் சற்றல மறைநாகத், கிடத்தின் மாத
வ ரிருவர்கங் கெனவடைந் திருத்தல்சான்
றரிதாகிக், கிடைத்த தேகமும் விவேகமு
மிருக்குஞான் றேகிரீ சனைநெஞ்சே,யடுத்தி
லாய்பல கவலைமாய்த் தோருணர் வாகிநின்
றகலாதே. 16

அகலு மிவ்வுடன் மினின்விரைந் தெ
ளின்விரைந் தாற்றெழீ தலதிங்கே, சகல
முஞ்செய நினைகுத றனையினித் தடப்புன
லிதுவென்றே, பகலி னுல்விரி கானலை
நெஞ்சமே கருதிநெற் பயிராதி, யிகலி னுற்
செய நினைபவர் நினைவையொத் திடுமென
விடுவாயே. 17

வாய்மை யீதுணர்ந் திடுதிநன் னெஞ்
சமே வருகணத் தேதேனு, நீநி னைந்திடே

லவ்வள வுட லுற னிச்சயிப் பரிதத்தாற், போ
ய தோர்கணச் செயலுனேல் பயனிலை புக
னிகழ் கணத்தேனுந், தீமை நன்மைநீ நினை
வதென் வினைவழிச் சிவன்றரு குதலாலே.

தருவ தீமையி னன்மையு மூழடுத்த
தையுயர் கழைமேனின், றுரைக ளாதிசெய்
கூத்தரிற் பிறனைநச் சொருமக டவனேவல்,
புரித றன்னினைம் பொறிகளாற் பற்றினும்
புகனிரா சையைநீயுற், றிரவினும்பக லினும்
விடே னெஞ்சமே யின்பவீ டெளிதாமே.

ஆமு னிச்சையே மேலுமே லும்பிறப்
பளிக்கும்வித் தெனநெஞ்சே, நீம றித்திடா
சைக்கடல் சுவறுமே நினைவெனுந் திரைமா
யும், போமி றந்தெலா நினைவுமெப் பொழு
திலப் பொழுதுபூ ரணமாய, சோம சேகரத்
தெந்தைபொற் கழலையுந் தொழலைய மிலை
னாமே. 20

நாம ரற்கருச் சனைமுத லியகொடு நல
ஞ்செய்தே மவையின்றித், தீமை செய்து

ளே மௌனவுமுன் னிலையொரு சிறிதசை வடைந்தாலும், யாமி யற்றப ராதமென் னி லைவுமற் றசைகிலை யெனிநெஞ்சே, யேயமிக்குறச் செய்யுநன் கிறைகழற் கெனத்து ணிந் திடுநீயே. 21

நீமெய்ஞ் ஞாநநன் னிட்டைசா ருத லரி தெனவுநெஞ் சகமேசற்,றேய்வி லாது செய் தியாநமா திகளெளி தெனவுமுன் ஞநின்றாய்,சேய்க டம்மின் தாய்கொல்சும் மாவிருக் குதல்செயற் கரிதாகிப், போயுழைப்புனக் கெளியதா யிருந்தவிப் புதுமை யென் புகனின்றே. 22

நின்று ருதலை குதல்விருப் புனக்கதை நீத்திருக் குதனெஞ்சே, யென்ற னக்குநல் விருப்புவா ளாவிவ ணிருத்தற் துயர்வீடு, சென்று காண்குவ லெனநினைந் தலைதியோ சிவன்றிரி சயமன்று, லொன்று நீயுஞ திருப்பதே யதைத்தொட ருபாயமென் றறிகண் டாய். 23

கண்ட வைம்புலக் காட்சிபோய்க்
காட்சியாற் கலந்தவா தனையாவும், வீண்டு
மூடமற் றலையிலாக் கடலென விளங்கினை
யெனினெஞ்சே,யுண்டு கொன்னமக் கொரு
துய ராங்குவீ டுளங்கையிற் கனியேயாம்,
பண்டை மேவிய பயமெலா மறுங்குரு
பதத்திலும் புகலாமே. 24

புகல ரும்பரப் பிரமமாங் கடறனிற்
புணர்பரைத் திரையீசன், சகமொ டாருயி
ரெனுநுரை யாதிக டந்துமாற் றிடுமென்
றே, பகரு நான்மறை யெனினறி லெதை
யெதைப் பற்றுவாம் விடுகிற்பாஞ், சுகசொ
ரூபமே யனைத்துமென் றகற்றுதி துவித
பாவனைநெஞ்சே. 25

நெஞ்ச மேயினிப் பாவனை நீதமாய்
நின்றிடின் றெனினிற்பா,யெஞ்சு ரூதகல்
புரணபா வனையையோர்ந் திலையெனி னுல
கெல்லா, மஞ்ச நக்களன் மேனியென்
றோர்ந்திலை யெனினருள் சுரந்தெம்பால்,
வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்ததோர்
வடிவையோர்ந் துய்வாயே. 26

உய்து நெஞ்சமே வாக்கினை மௌனமாக் கிலையெனி னுளதேசொன், மெய்தருஞ்சொலும் பொய்நயம் பயக்கிலா விடத்தின துடைத்தேனும், பொய்த ருஞ்சொலியான்செய்தேன் பிறர்செய்தா ரெனினவைபோனுலு,மெய்தருஞ்சிவ மன்றிதென் ருன்றைறநீ யிசைத்தல் பொய் யெனத்தேரே.

தேரி னிவ்வுடல் சமாதியி லசைவறச் சித்திர தீபம்போற், சார வைத்திட்டு தில்லையேற் குருபரன் றனதரும் பணிமேற்கொண், ணேரு மூழ்வழி தொழில்பிறிதடையினு நெஞ்சமே யுயிர்க்கெல்லாம், பேரி தஞ்செய்வித் திடுமுடை கெழுமலப் பிணக்கிதஞ் செய்யேலே. 28

செய்யு நந்தொழி லைந்தொழி லியாமுமச் சிவனது வடிவென்றே, மையய மற்றுண ராதியா னெனுஞ்செருக் கடைந்துநாடொறு நெஞ்சே, நைவ தென்னைநீ பஞ்சகோ சங்களு நாமல வெனுவுண்மை, கையிலாமல கம்மென வுனக்கியான் கழறியுந் தெளியாயே. 29

தெளிவு யிர்க்கரன் விளக்குதன் மயக்க
வன் றிரோபவிக் குதறேகம், விளிவை யுற்
றல்சங் காரமிங் கிதாகித மேவுத றிதிதோற்
ற, முளசி ருட்டியே லம்பைநோ தலினுன்
னை யும்பிற ரையுநாடித், தளர்வ தும்மகிழ்
வதுமடைந் துள்ளமே சம்புவை மறந்தாயே.

மறைத்த லுந்நினைத் தலுஞ்செயு மாண
வ மாயைநின் றவைதம்மைத், துறத்த லேயி
ராப் பகலகல் வீடெனச் சொல்வாத் துறவெ
ய்தக், குறித்தி டிற்பா பத்திஞா நத்திறற்
கூடுமற் றவைநெஞ்சே, நிறத்த பத்திநஞ்
செயலறி ஞமறி னின்றமற் றென்றுமே.

ஒன்று நஞ்செய வில்லைநெஞ் சேயிவ
ணோர்மய லதனாலே, சென்று சென்றுவெம்
பவக்கடல் மூழ்கினஞ் செறிமய லேதென்
ன, நன்று நீவினா யிருவினை வினையையு
நான்செய்தே னெனுமாந, மென்ற றிந்
திடு தொன்றைபு மாற்றினை யெனினுனக்
கிணையாரே. 32

இணையின் ஞாநபூ ரணன்முழு துணை ர்ந்தமைத் திட்டவா றலதிங்கே, யனைவு முதொரு தீதெமக் கவன்றரி ஞர்சடுப் பவர் நெஞ்சே, பணைகொ டாவா மாநமின் மையி னுருப் பற்றிநின் றிலகொல்லோ, வுணைவு முதுடற் காவல்கை விடுதியூ ழுள்ளவா விடா தென்றே. 33

என்றும் வீட்டைந் தவறிறு மாக்கயா னிறப்பைவிட் டகலாம, னின்று தான்றலை சாய்க்கவோ நெஞ்சமே நினைத்துணை யாக் கொண்டு, நன்று நீயிதற் கென்செய்கேன் சாவனோ நானென விலையாறு, லொன்று செய்மலக் குடிலிதி லவாவைநீக் குமாபதி தரும்வீடே. 34

வீடு கூட்டுவான் குறித்ததி னிமித்தமா விமலனீ தலினம்பாற், கூடு மாயையை யெ னதியா னெனவெணிக் கொள்வதென் பய மாசை,நாடு போழ்திவை சுழுத்தியிற் புரந்த வனெவனவ னநவாதி, யூடு சூழ்வழி புரப்ப னென் றுள்ளமே யுடல்கைவிட் டிருப்பாயே.

இருப்பை நாடொறு நெஞ்சமே சுகா சுக மெதுவரு மதுவேயாய்ப், பொருப்பு வில்லிதாள் விருப்பமெவ் வினையினைப் புசிக்குஞான் றடைவாயோ, கருப்பை யுற்றுறித் தறற்கும் ழியினழி காயமீ தளபோழ்தே, குருப்பி ரான்றிருக் கழற்குமெய் யன்புகீ கொள்ளதென் னிமையாமே. 36

ஆமை யாருறுப் பைக்கையு மோர்மெயு ளடக்கலிற் புலனைந்துந், தீமை சேர்விட யங்களிற் செலாதமைத் துள்ளமே சிவைபாக, சோம சேகரன் சரணமே சரணெனத் தொழுதுநின் றழுதன்றோ, ஞம நாவினுற் செபித்திலே யவத்திலே நாளெலாங் கழித்தாயே. 37

தாயு மாகியென் றந்தையாய் வந்துதா டருசிவப் பிரகாசன், றாய பொன்னருள் வேண்டிலை யீண்டுநின் றுணிவிருந் தமையென்னே,காய மாயமென் றறிந்துமா தர்கடரு கவெவிவேண் டினையென்றூற், றீமையே மிக நெஞ்சமே யிதற்கியான் செய்வதொன் றறியேனே. 38

ஏனை நூல்பல வோதினை யோதவற்
றிறையரு ளடையாதார்க், கூன வெம்பவ
மொழிப்பதற் குள்ளமே யுபாயம்வே றிலை
யானா, லானை யீருரி போர்த்தவென் றம்பிரா
னருள்விரைந் தடையாதே, தானி நாண்மி
னார்போகநீ வியந்தது தப்பலாற் சதுரன்றே

சதுர்ம றைப்பொரு ளாகிய வொரு
சிவ சங்கரற் றொழுதன்பாய், விதிர்வி திர்
த்துமெய் பொடித்திலை நடித்திலை விரைந்து
சென் றவனாடும், பொதுவை யுற்றிலை நிற்
றிலை மாதர்பாற் போகுத றவிர்ந்தாவா, வெ
துப டக்கட வாய்மட நெஞ்சமே யினியுட
லகன்றாலே. 40

ஆல நீழலி லன்றொரு நால்வருக் கரு
நெறி யுரைத்தானைக், கால காலனைச் சிவப்
பிர காசவென் கண்மணி தனையுன்னா, தேல
வார்குழ லார்மயல் கொண்டுநீ யிங்குழ லுவ
தெல்லாஞ், சால வேபிழை யாகுநெஞ்
சேசொனேன் றவறிலை யென்மேலே. 41

என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ திச்சைவைத் துழல்கின்றாய்,பொன்னை யுந்துகிலையும்பிரித் திடின்வெறும் புழுமலக் கூடல்லாற்,பின்னை யுண்டுகொல் கண்டுநீ மயங்குதல் பிராந்திசங் கரன்பாதந், தன்னை நாடுதி நெஞ்சமே பரசுகோ ததியுறப் பெறலாமே.

பெறுவ தென்னைகொல் சுக்கிலங் கலித்தலாற் பெருந்தவ வலிகுன்று, முறுவ தவ்வள வோபினை நீவிரும் புடற்குமா நியதுண்டா,லறிவி யாமறி யாமைதோய்ந் துடற்றின வதைச்சுக மெனுகின்றாய், செறிது நெஞ்சமே நமதுசிற் சுகமினிச் சிவனையாதரிப்பாயே. 43

ஆத ரித்தனை குளகிரு தாதிய வடிசிலைக் கூழ்காடி, யேது பெற்றிடி னும்புசித் தாற்பசி யேகலுஞ் சமித்தற்றாற், பேத மற்றெலா மலமதா தலுஞ்சரி யென்றிடிற் பினைநெஞ்சே,நீத ரித்திலா தவைவிழைந் துழல்வதென் னிமலனை நினையாதே. 44

நினைப்பி னுங்குறி காட்டிடுங் கோசநா
விவற்றுணே ரிழையாரை,யினிப்பை நல்கு
முக் கனிமுத லியவுண வினையெனி னிலவ
போலு, முனைப்பல் வாதைசெய் பகைபிறி
திலையுணர்ந் துள்ளமே யொழித்தாயேற்,
பினைப்ப ராபரன் திருவடி நீழலியாம் பெறற்
கிடை யூறின்றே 45

இன்று சூழ்தரு வனிதைய ராதிபல்
போகமு ரித்தேகத், தொன்று நோயெனிற்
ரூடமாய் நீங்குமாங் குயிர்பெயரினுநீற்றை
நன்மற னைவணிந் துறவின ரிறைபெயர்நவி
லுவ ரெனினெஞ்சே. பொன்று நாட்டுணை
யாகநீ ருதிய போற்றவை போற்றேலே.46

போற்றி நீறணிந் துருத்திர சாதநம்
பூண்டிடைந் தெழுத்துள்ளே,சாற்று நீகுரு
வாதிமே வுருவையுந் தாழ்ந்திறைஞ் சினைவ
செய்தான், மாற்ற லாம்பிறப் பிறப்பினை
நெஞ்சமே மன்றுளா டியதாளுந், தோற்று
முள்ளொளிக் குள்ளொளி யாயதைத் தொ
ழுதுவாழ் தலுமாமே. 47

வாழ வாமரன் புகழின மலர்கவி மாலை
செய் தவன்றனில், வீழு மாறுபொன் னி
தழிசேர் தோள்களின் மீதணிந் தினிநெஞ்
சே, தாழு வாயரி தேடுபொற் சரணமே சர
ணமென் றிதுவன்றிப், பாழி லேகருங் காக்
கைபோற் கதறிநாள் பலகழித்தொழி யேலே

ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்
ளமே யோதுமூ துணர்வோர்முற், பழிச்சு
பாடலை யரற்கவை விடர்க்கிளம் பாவைய
ருரைபோலுங், கழித்தி டேலுப சாரமென்
றிதனை கட்டுரை யெனக்கொள்வாய், விழி
த்து மாரனை யெரித்ததே வருள்பெறும்
விருப்பினர் விருப்பீதே. 49

விருப்ப மாயிது கேட்டிநன் னெஞ்சமே
விமலனுக் காளல்லார், பொருப்பை நேர்த
நஞ் சொரியினு மவர்கணோர் புன்னுனித்
துணையன்புந், திருப்பி டேலான் றொழும்
பர்தந் தொழும்பனுய்த் திரிந்தவர் பணிசெய்
தீண், டிருப்பை யேன்மிக நல்லையிச் சொ
ல்லைநம் பில்லையேற் பொல்லாயே. 50

தோத்திரம்.

போல்லாதவெ னெஞ்சமோ ரைந்து
புலன்கடம்பா, லல்லா தரை மாத்திரை யுந்தி
ன் னடிக்கணன்பாய்,நில்லாதிதற் கென்னை
செய் கேணிதை நின்றிடென்றே, சொல்லா
ய்திருத் தில்லையுண் மேவிய சோதிநீயே. 1

நீயேயருள் செய்யினல் லாதுபொய்
நெஞ்சவஞ்சத், தீயேனுனை வந்தடை சற்
றொரு செய்கைகாணேன், பேயேனுமு
னைத்தொட ரும்படி பேசுதில்லைத், தூயோ
யொரு பாயம்வி டாதினிச் சூழ்ந்து நின்றே.

நின்றாய்திருத் தில்லையு ளாயென்ற னெ
ஞ்சினுள்ளே, யென்றாலுமெ னக்கதி தூரம
தாயிருந்தா, யொன்றாலுமு னைத்தொடர்
கிற்குமு பாயங்காணேன், மின்றாழ்சடை
யாய்'தமி யேற்குவி ளங்கிடாயே. 3

விளங்கும்மெழிற் பேதையர் காதல்வி
டாதயானக், களங்கம்மறு வோர்தொழு நின்
கழல் காணுமாறென், றுளங்கும்மொளித்
தூமதி சூடிய தோன்றலேயென், னுளங்
கொண்டிடு நீயினிக் கோயில தாவுவந்தே.

வந்தித்திடு வார்பவ நோய்க்கு மருந்த
னையைச், சந்தித்திடு வான்மறித் தான்மநந்
தப்பியப்பா, லிந்தப்புவி யுங்கட லுங்கடந்
தேகுமென்று, லெந்தப்படி யுய்வதி யான்றி
ல்லை யெம்பிரானே. 5

பிரானே திருத் தில்லையு ளாயன்றிப் பேதை
யுயேன்மு, னானேறிவர்ந் தம்பிகை யோ
டெளி தோடிவந்தாய், வரானைவின மெம்
மிறை யென்றுனை நாடிவாடி, யிராநாயடி
யேற்கெதிர் தோன்றிலை யின்றிதென்னே. 6

என்னையக னேயிமை யோர்தொழு மீ
சனேசெம், பொன்னார்திரு வம்பலத் தாடி
ய பூதநாதா, வுன்னரு ளாலினி வீட்டிடை
யுய்த்தியின்றேற், பின்னருயக் கொள்ள
வ லாரென்பி ழைகளர்த்தே. 7

தீராதவோ ரைம்புலச் சேட்டையுந் தீ
ர்ந்துபோய்வெங், கூரார்மழு வாளிநின் பா
தங் குழைந்து போற்றி, நீராயுரு கித்தொழு
துன்னெதிர் நிற்கும்வண்ணம், மோர்நாளுள
தோதமி யேற்குமு ரைத்திடாயே. 8

உரையேனனி வாய்திறந் துன்புகழ் தன்னைநாளும், விரைபார்மல ரிட்டருச் சிக்கவி ருப்புமில்லேன், கரையேனுள நின்னினைந் தெத்திறத் தாற்கடப்பேன், றிரையார் வினை யார்பிற விக்கட றில்லையானே. 9

ஆனேறிவர்ந் தென்னெதி ரேவிரைந் தன்றுவந்தோய்க், கேனோவெறப் பிப்பொழு தோர்சற் றிரங்குகில்லாய், நானோவறிவே னுன் பெருமையை நம்பனேநீ, தானேபொறுத் தாளுகண் டாயென்ற வலறலாமே. 10

எல்லாமறி வோயறிந் தேவகுத் திட்டவாறே, யல்லாற்றமி யேனும்பு ரிவதொன் றில்லையானற், பொல்லாமைசெய் வித்தவனீபொருப் பானுநீகல், வில்லாயினைத் தேனைப்ப வத்தினி விட்டிடேலே. 11

ஏலக்குழ லாரது ராகமதென்னுமாயா, சாலக்குணந் தேற்குன தின்னருடந் துகாப்பாய், நீலக்கள மாலய னோடுமுன் னேடிவாடு, மூலக்கன லேகன லேந்துகைம் முக்கணனே. 12

கண்ணார் நுத லோய்கடை யேனை யு மொன்றதாயே, யெண்ணைவரு ளன்றுசு ரந்துளைக் கின்றிலாதென், விண்ணோரிறை யோய்ச்குமு ண்டோ சொல் வெ ப்பிலேடு, தண்ணார்விருப் புங்கரிப் போர்வயை சாற்றிடாயே.

சாற்றாய்திருத் தில்லை யுள்ளாய்சிவ சங்கரா வெண், ணீற்றாய்கடை யேனுயு மாறென்ற னெஞ்சுளஞ்சிப், போற்றா ருந் தேன்வருந் தாமலென் புத்திதன்னைத், தேற்றாயொரு நீயினி யன்பிலைச் செய்யுமாறே. 14

மாறாயவோ ரைந்துபு லன்வலி மாய்த்து நெஞ்சை, நீறார்திரு மேனிய வுன்கணிறுத்த மாட்டேன், னேறாத பவக்கட லேறவு மெண்ணிநைந்தேன், கூறாயென தெண்ணமெவ் வண்ணங்கை கூடுமன்றே. 15

அன்றேதமி யேற்கெளி மானுட ஞகிநீவந், துன்றாள்கள ளித்தனை பெற்றுமொன்றும் பெறாரி, னின்றேனல தைம்புல

னென்வச நின்றதில்லை, யின்றேதவற் றைக்கொலு பாயமொன்றீசவெற்கே. 16

எற்கோவுன தன்புமனத்திலே யென்ற னெஞ்சங், கற்கேநிக ராயநெக் கல்லேநீ கல்லே யில்லா, முற்காலவனைத் தாங்குவனோ தன் பின்மூழ்குவிப்பாய், சிற்கோலசிதம்பரநாயக தேவதேவே.

தேவேயுனை யன்பினிற் பூசைசெய்தே னுமல்லே, னுவான்மிகப் பாடிநின் றடிநய க்குகில்லே, ேனவாதுழ றீமநத் தோடிவ னுற்றனேன்மற், றுவாவினி யென்வருமெ ன்ப தறிந்திலேனே. 18

அறியாமையிற் கீழவர் பல்பிழை யாற்றி னுலுங், குறியாதருள் செய்வது மேலவர் கொ ள்கை யன்றோ, மறியார்கரத் தோய்சிறி யே ன்வினை மாற்றி யாளப், பொறியே லுனக் கென்முக மன்சொலப் பொய்யனேனே. 19

பொய்யற்றவர் வந்தடை யும்பரி பூரண விம், மெய்யற்றவெற்கு நினலா னிலே வேறு முண்டோ, தையற்கிட மேயிடமாவரு டாணு

வேயென், மையற்றவிர்ப் பானுன்க டா
க்ஷம்வ ழங்கிடாயே. 20

வழங்கெற்கிவ ணேதுசெய் தாலெது
வாகுமென்றென், றெழுங்கற்பனை யாவுமி
றந்துணர் வேகமேயா, யொழுங்கிற்புல
னாகியு பாதியொ ழித்தொருன்னைச், செழு
ங்கைக்கனி யொத்துண ரும்படி தில்லையா
னே. 21

தில்லைப்பதி மேயசி வப்பிரகாசனேயோ,
தொல்லைப்பிற வாம்நறி மேவிய தோன்ற
லேயோ, வல்லற்பிற விக்கிளைத் தேன்றனை
யஞ்சலென்றோர், சொல்லைப்பக ராய்விடை
மீதினந் தோன்றிநின் றே. 22

தோன்றாத்துணை யேபுணை யேவபத்
தொல்கடற்கென், போன்றார்க்குமி ரங்கும
ருட்பெரும் போதமேயிந், கீன்றார்மனை
யாதிய மோகமெ லாம்விடுத்துட், சான்றா
முனை யேவினை யேனினிச் சாரவெண்
ணே. 23

சார்ந்தாய்குரு வாதிய வாய்விடை தன்
னில் வந்தாய்,கூர்ந்தாயரு ளிற்பிற வாநெறி
கூட்டுவித்தா, யோர்ந்தேன் குறை யின்றெ
னி னுங்குறை யுண்டுகண்டாய், பேர்ந்தோ
டுமெ னெஞ்சுளேன் னன்புபி றக்குமட்டே.

பிறவாநெறி யாகிய தோர்திருப் பே
ரையாவெம், முறவேயற வேதவிர்ந் தென்
மந மோடிவாடிப், புறவாதனை பற்றிவ ளர்
ந்திடு புன்மையாலின், றிறவேயத னைப்புரி
வானுளத் தெண்ணுவாயே. 25

எண்ணும்வடி வேதினி நீபுனைந் தெய்
தினுனுந், தண்ணம்மென வாவக லாவச்
சிதம்பரத்தே,நண்ணும்முன துண்மையைக்
காணந யந்துளேனென், னுண்ணின்றதைக்
காட்டுதற் கீசசற் றன்னுவாயே. 26

உன்னும்முணர் வுக்குணர் வாயெனக்
குண்மை தந்தாய், மன்னுஞ்சுரு திப்பொரு
ளாய்வழி காட்டிநின்றாய், பின்னுங்குரு

வாயடைந் துன்னருள் பேணவைத்தா
யென்னென் றுரைப் பேனின்க ருணையிரு
ந்தவாறே. 27

இருந்தோரு மிடத்துணர் வில்லைமா
யைக்கிதன்பாற், பொருந்தாவிடத் தில்லை
யுயிர்க்கொரு போதமேனுந், திருந்தாவிவை
கொண்டிறை யைந்தொழில் செய்திடுமென்
றே,வருந்தாவருண் முன்னிலை தன்னை மதி
த்தியானே. 28

மதித்தென்பரு வத்தளவிற்குரு வாதி
யாகி, யுதித்துள்ளறி வோங்கும்வ கைக்கு
பா யஞ்செய் தாயை, யெதிர்த்திங்ஙனஞ்
சற்குரு சற்குரு வென்றுநைந்துந், துதித்துந
திரி யாவெணக் கின்னருடந்து தான்றே.

தோன்றுமன்மு னிந்தொரு தாய்வயிற்
றோன்றுபால, ரீன்றுடலைத் தம்மின் வே
றுகொடி கழ்ந்தவாபோற், பூன்றுவொருநீ
யரு ளாற்புனை மேனி யெல்லாம்,யான்றன்
பல தெய்வமெ னக்கொடி கழ்ந்தவாறே.30

இகழும்பொரு ளொன்றிலை மண்முத
லெட்டுமெந்தாய், நிகழுன்வடி வேயெனத்
தேர்ந்துள நெக்குநின்றாட், புகழும்படி
யேயினி யீசவென் புத்திதனை , திகழும்
படி செய்திதி ரோபவஞ் செய்திடேலே. 31

செய்யாய்கரி யான்றொழும் வெள்ளி
ளஞ் சேவையூர்வோய், வையார்மழு வோய்
திரு வுள்ளமிவ் வஞ்சனேனு, மையாவிழி
பெய்வுற நீர்பெரி தன்பினோடு, கையாற்
றொழு தேத்திநின் கூத்தினைக் காணுமாறே

காணாதப வக்கட லின்கரை கணவெ
ற்குக், கோணாகணி மார்பமெய் யன்புகொ
டுத்தியென்றே, நாணாதிசைத் தேன்றிருக்
காளத்தி நாதவன்றாட்,பேணாதவ லக்கடன்
மூழ்கிய பேதையேனே. 33

பேதைக்கொரு பாகம ளித்திடு பேரை
யாவெங், கோதைக்குநின் றோளூறு கோ
தைகொ டென்றுநின்பா, லோதற்கெ னுள
தைவி டுத்தன னோடிமாதர், காதற்களை
யுண்டமை யாலுனைக் கண்டதின்றே. 34

கண்டேன்கள் கூர்ந்துசி வப்பிர காச
நாமங், கொண்டோங்குரு வோடிவ னுற்
றெனை யாண்டகோவே, பண்டேயொரு
நீவருத் திட்டப டிக்கியானுன், றொண்டா
கிவர் தின்றுனைப் பாடத்தொ டங்கினே
னே. 35

தொடக்காயெனைச் சூழ்ந்துள வைம்பு
லத் தோற்றமெல்லாங், கெடக்கூறுதி நீ
யொரு சூட்சிகி னக்கிலாயே, லடக்காவவை
யென்றன கத்துள டங்குகாறுங், கடக்கே
ன்பவ வேலையெவ் வண்ணமுக் கண்ணி
னனே. 36

கண்ணனென்மத னைப்பொடி யாம்வகை
கண்டவெண் டா, வண்ணுவுயிர் யாவும வி
த்திடு மப்பனேயோ, தண்ணார்பொழிற்
றில்லையு ளாயெனக் கீது தாராய், மண்ணுதி
ய வாசைக ளற்றுனை வாழ்த்துமாறே. 37

வாழ்த்தேனுத் நாடொறும் வாழ்த்த
வல் லோர்கடாளிற், றாழ்த்தேன்றலை யாங்

கவ ரேவ றலேக்கொள்கில் லேன், வீழ்த்தேத் னெடுங் காலம வத்த வொண் ணேமருவில் லோய், பாழ்த் தேன்கிளி போற்பல நூல்கள் படித்துமியானே. 38

யாரொருடற் கின்பதுன் பங்களை யெண்ண வெண்ணித், தானேசிறு பாலரி னென்மனஞ் சஞ்சலிக்கு, மீனையினன் பாலல தென்கண்வழி டுத்திகொல்லோ, வானே யுடை யாய்த்தி யாமதி காரநீ யய. 39

காரார்மிடற் றுயனி சூழ்தரு பொற்கடுக்கைத், தாரார்புய னேசிவ காமசு வுந்தரிக் கோர், சீரார்மண வாளவென் றன்குல தெய்வமேமநீ, பாராய்கடைக் கண்ணெனை தெண்ணம்ப லிக்கவின் றே. 40

இன்றென்னை செய் கேனென நாடியி ருந்ததீ யற், கொன்றெய்திெனவ் வண்ணம றும்மதை யோது வேனே, வன்றன்னமு மேனமு மோர்வரு மையநின்று, ளொன்றன்பர்கு ழாத்துற வீதரு ளாயுவந் த. 41

உவந்தாயென வைம்புல னும்மிரிந் தோடவோர்கா, டவந்தான்சிறி தும்மிலி பால்விடை தன்னின்மின்றே,டிவர்ந்தேவா நாளும்வி ளங்கிலை யென்னை கொல்லோ, வவந்தான்மிகு பாவியுன் லீலைய றிந்திலே னே. 42

அறியாமையிற் கட்டுண லுற்றதென் ஞண்மையத்தைப், பிறியாதுவி டேனென லெந்தைபி ரானு ஞண்மை,குறியீரு வர்க் குமென் றுலெனக் கோபி யலே, செறி வாய்மல மேயிறை யோடிகல் செய்ததன்றே

செய்விப்பன் வினைத்தொகை வெம்ப வஞ் சேர்ப்பனுன்னை,யுய்விப்ப னெலச்சிவ ஞண்மையு மோர்வனென்று, ரைவர்க்கெ தி ரேயெனை நோக்கிய றைந்தனையா, மை வெற்பன வாணவ நீயதை மாற்றிடாயே.44

மாற்றுயெனக் காணவ மாயையில் வந் துவந்தே, தோற்றுவுள கேவல மாதிய சுத்த மொன்றா, டேற்றுயவ னேற்றியி ரண்ட

றுத் தெங்குமாகிக், கூற்றுவிகொள் பதத் தென் னுவியுங் கொள்ளுவாயே. 45

கோள்ளேனெனி னுமெழுத் தைந்து முட் கோதியாதுந், தள்ளேனெனி னுமு னைச் சார்தவஞ் சார்ந்திலாரை, விள்ளே னெனி னுமெனை நீகைவி டேல்விடேல்கா ணள்ளாறுடை யாயவி நாசிந யந்துளானே.

நயவாதுதில் லாபுரி யோயுனை நாடிநா ளும், வியவாதுட லோடுற லென்றும்விடா தென்னுள்ளங், கயவாதுறு போகமெ லா மினைவ கண்டுவீடும், பயவாதிதென் றேபயந் தேன்மிகப் பாவியேனே. 47

பாவாற்பெரி யோர்புகழ் சிற்றம்பல த்துளோயை, நாவாற்சிறி யென்றுதி செய்யு மிங் நன்கில்சொல்லு, மோவாதிரை யோ ருழை தாவிய வுன்செவிக்கே, மேவாதல வென்றுது ணிந்துவி எம்பினேனே. 48

விளம்பற்கருஞ் சோதியென் கோவி டை யோனென்கோவென், னுளம்புக்க

சிவப்பிர காசனென் கோவென் னங்கைத்,
தளம்பற்றிய சார்ந்தனென் கோநின் றனது
நாமம், வளம்பெற்ற திருக்கயி லாயசொல்
வாயெனக்கே. 49

எனக்கீந்தினி யாண்டிடல் வேண்டுமெம்
மீச னேமற், றுனக்கேசர ணஞ்சர ணம்புல
னேடுமென் றன், மகக்கோதனைத் துமிறந்
தோங்கறி வாகியாங்கே, பிணைக்காண்பவன்
காட்சியு மற்றவ பேதவாழ்வே. 50

வைராக்கிய சதகம் முற்றுப் பெற்றது

சாஸ்திரமும் ஸ்தோத்திரமும் உள்படச்
செய்யுள் 100.

சர்வஞ் சின்மயம்.

விலாசம்:—

குருசுவாமிகள்

ஸ்ரீ. க. சிவப்பிரகாச சுவாமிகள்

மடாலயம்.

வியாசர்பாடி.

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு

சென்னை.